# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 02 / 2022**

திரு. பி. வேலுசாமிதுரை,
த/பெ. பெரியசாமிதுரை,
கிழக்கு தெரு, கீழுர் அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி – 607 302.

………மேல்முறையீட்டாளர்
(திரு. பி. வேலுசாமிதுரை)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/குறிஞ்சிப்பாடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணா நகர், CDL மெயின் ரோடு,
குறிஞ்சிப்பாடி – 607 302.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப/வடலூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV வடக்குத்து துணை மின் வளாகம்,
State Form Corporation கண்ணத்தோப்பு,
வடக்குத்து – 607 303.

...... எதிர்மனுதாரர்கள்
(திருமதி. V. செல்வமணி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/வடலூர்
திரு K. செந்தமிழ்செல்வன், உதவி பொறியாளர்/SFC/ வடக்குத்தூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 04-01-2022**

**கேட்புரை நாள்: 03-03-2022**

**ஆணை நாள்: 10-03-2022**

04.01.2022 அன்று பெறப்பட்ட திரு. பி. வேலுசாமிதுரை, த/பெ. பெரியசாமிதுரை, கிழக்கு தெரு, கீழுர் அஞ்சல், குறிஞ்சிப்பாடி – 607302 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 02/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட

மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 03.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

வீட்டு மின் இணைப்பு எண் 044-017-1065-ஐ திரு சந்தோஷ்குமார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை கடலூர் மின் பகிர்மான வட்டம் சரியென ஏற்று அளித்த தீர்ப்பை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 திரு M. ஏகநாதசுவாமிதுரை அவர்களுக்கு சொந்தமான வீட்டின் மின் இணைப்பு எண் 044-017-1065-ஐ போலி ஆவணங்களை கொண்டு திரு சந்தோஷ்குமார் தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொண்டதாக மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்று, வீட்டு வரி ரசீது மற்றும் VAO சான்றின் அடிப்படையில் திரு சந்தோஷ்குமார் பெயருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து தரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 வீட்டின் மீது சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் வீட்டு மின் இணைப்பு பெயர் மாற்றத்தை வழக்கு முடியும் வரை நிறுத்தி வைக்குமாறு மேல்முறையீட்டாளர் கடலூர் மின் பகிர்மான வட்டத்தை 18.09.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின்பகிர்மான வட்டம் 18.12.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

கடலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.12.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"வழக்கெழு வினா -1*

*மின் இணைப்பு எண் 044-017-1065-யை பெயர் மாற்றம் செய்ய கூடாதா?*

*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்வழங்கல் விதி தொகுப்பு 5(7)-ன்படி உரிய ஆவணங்களை பெற்றுக் கொண்டு பெயர் மாற்றம் செய்யலாம். மனுதாரர் ஆட்சேபணை செய்யும் மின் இணைப்பு எண் 044-017-1065-ன் இடம் குறித்த நீதி மன்றத்தில் வழக்கு நிலவையில் உள்ளதாக மனுதாரர் குறிப்பிடும் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஏதும் இல்லாத நிலையில் பெயர் மாற்றம் செய்ய கூடாது என இம்மன்றத்தினார் உத்திரவிட இயலாது.*

*மனுதாரர் தொடர்ந்துள்ள வழக்கின் S.P.No.34858/2018-ன் பெறப்படும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளமாறு இம்மன்றம் எதிர்மனுதாரர்களுக்கு அறிவுறுத்துகிறது.*

*வழக்கெழு வினா -2*

*வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழு வினா-1 ஆனது மனுதாரருக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது.*

*ஆகவே மனுதாரர் தாக்கல் செய்த மனு மேலே கூறிய எழுவினாக்களின் முடிவில் இந்த மனு தள்ளுபடி செய்கிறது. செலவு தொகை இல்லை."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 03.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. பி. வேலுசாமிதுரை அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி. V. செல்வமணி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/வடலூர் மற்றும் திரு K. செந்தமிழ்செல்வன், உதவி பொறியாளர்/SFC/ வடக்குத்தூர், கடலூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கு கீழூர் கிராம நிர்வாக அலுவலர் அளித்துள்ள சான்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் சர்தோஷ்குமாருக்கு மின் இணைப்பு பெயர் செய்யலாம் என்று வழங்கியுள்ள சான்றிதழில் (ஆ,பதிவேடு, சிட்டா அடங்கல்) எதில் சந்தோஷ்குமார் பெயர் உள்ளது என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 கீழூர் கிராம நிர்வாக அலுவலர் சந்தோஷ்குமாருக்கும் வீட்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யலாம் என்று சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும், அதே போல் தனது அண்ணன் ரெங்கராஜதுரை அனுபவத்தில் வீடு உள்ளது என்று சான்றிதழ் வழங்கியுள்ளார். இரண்டு நபர்களுக்கு ஒரே இடத்தை சான்றிதழ் வழகியுள்ளதால் VAO நம்பகத்தன்மை அற்றவர் என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 பஞ்சாயத்து உதவியாளர் வழங்கியுள்ள வீட்டு வரி ரசிது எந்த ஆவணத்தில் இருந்து சந்தோஷ்குமார் பெயரில் வழங்கப்பட்டது வீட்டு வரி டிமாண்டு ரிஜிஷ்டர் ஆவணத்தில் உள்ளதா என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 திரு சந்தோஷ்குமார் பெயரில் எந்த பதிவு பெற்ற ஆவணங்களிலும் (ம) பதிவு பெறாத ஆவணங்களிலும் பெயர் இல்லாமல் 1065 மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 VAO சந்தோஷ்குமாருக்கு வழங்கிய மின் இணைப்பு பெயர் மாற்றம் சான்றிதழில் சொத்து நான்கெல்லை தவறானது எனவும், பெரியசாமிதுரை இடத்திற்கும் தெற்கு என்பதற்கு மாறாக முத்துதாண்டவபாட்சால நயினார் நிலத்திற்கும் தெற்கு என்று பொய்யான தகவல் எழுதப்பட்டுள்ளது. இதை நான் எடுத்து கூறியும் குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 வீட்டில் ரெங்கராஜதுரை குடியிருந்து வருகிறார் என்பதையும், பொய்யான ஆவணங்களை பார்த்து நோட்டரி பப்ளிக் வழங்கிய NOC அவணம் எப்படி உண்மையானது என்பதையும் குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 சந்தோஷ்குமார் பெயரில் எந்த ஒரு ஒதிவு பெற்ற (அ) பதிவு பெறாத வீட்டின் ஆவணம் இல்லாமல் அரசு வழக்கறிஞர் வழங்கிய கருத்து எப்படி உண்மையாக இருக்க முடியும், லஞ்சம் கொடுத்து பெற்றது என்பதை தான் கூறியும் குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 சொத்து ஆவணம் இல்லாமல் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய வாரிசு சான்றிதழ் வழங்கி செய்யப்பட்டதா என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 வீட்டின் மின் இணைப்பு எண், அந்த இடத்தின் சர்வே எண் சம்பந்தமாக எந்த ஆவணமும் இல்லாமலும், மேலும் இரத்த சம்பந்த உறவுமுறை இல்லாமலும் VAO சான்றிதழ் பஞ்சாயத்து வீட்டுவரி, நோட்டரி பப்ளிக் ஆவணம் மூலம் அரசு வழக்கறிர் வழங்கிய கருத்துரு பெறப்பட்டு வாரிய விதிமுறைகளின்படி பெயர் மாற்றம் செய்யலாமா (அ) செய்ய கூடாதா என்பதை மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 வழக்கு எண் W.P. 34858/2018 தனக்கும் தனது சொந்த சித்தப்பா ஏகநாதசுவாமிக்கும் வழக்கு நடைபெற்று கொண்டு இருக்கிறது. அவர் 5.7.2021

அன்று இறந்த பின்பு அன்றே வழக்கு முடிவு பெற்றுவிட்டது. காரணம் அவர் திருமணம் ஆகாதவர். அந்த வழக்கில் வாதியும் தானே, வாரிசுதாரரும் தாங்கள் ஐந்து நபர்கள் மட்டுமே, வேறு யாரும் வாரிசு கிடையாது எனவும், 1065 வீட்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த சந்தோஷ்குமார் இரத்த சம்பந்தம் இல்லாமலும் வாரிசு உறவுமுறை மற்றும் பதிவு பெற்ற (அ) பதிவு பெறாத வீட்டின் உரிமை ஆவணம் இல்லாதவர் பெயரில் எப்படி மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யலாம் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 வழக்குக்கும் வீட்டுக்கும் எந்த ஆவணமும் இல்லாதவர் பெயரில் எப்படி நீதிமன்றத்தில் தடைஉத்தரவு பெறமுடியும் எனவும், ஏகநாதசுவாமிதுறை 5.7.2021 இல் இறந்த அன்றே வழக்கு முடிந்து விட்டது எனவும், அந்த வீடு மற்றும் அந்த இடம் தங்களுக்குச் சொந்தமானதாக ஆகிவிட்டது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 அந்த வீட்டின் மீது மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய எந்த உரிமையும் சந்தோஷ்குமாருக்கும் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்பதை குறைதீர்மன்றம் கவனிக்க தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேற்கூறிய கருத்துக்களை கவனிக்க தவறிய எதிர்மனுதாரர் வீட்டு மின் இணைப்பு எண் 1065–ஐ சந்தோஷ்குமார் பெயரில் பெயர் மாற்ற செய்த உத்தரவை ஏற்றுக் கொண்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து தான் கோரிய பழைய நிலையிலேயே மின் இணைப்பு இருக்க உத்தரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் செய்யலாம் என கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்வழங்கல் விதி கொகுப்பு 5(7)–ன்படி உரிய ஆவணங்களை பெற்றுக்கொண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களில் வீட்டுவரி ரசீது உண்மை நகல் விண்ணப்பத்துடன் இணைத்து மின் நுகர்வோர் அளித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களில் திரு. ஏகநாதசாமிதுரை அவர்களின் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தில் எழுதியுள்ள சொத்துக்களை தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் விடுபட்டு போயிருந்தாலும் அவைகளையும் தனது தம்பி குமாரர்கள் திரு.வெற்றிசெல்வன், திரு. சந்தோஷ்குமார் ஆகிய இருவரும் ஆண்டு அனுபவித்துக்கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் செய்யலாம் என கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளதில் நான்கெல்லையில் முத்துதாண்டவராக பாட்சால நயினார் நிலத்திற்கு தெற்கு என குறிப்பிட்டுள்ளது வருவாய் ஆவணங்களில் சரியாக உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களை பெற்று களஆய்வு செய்தபோது விண்ணப்பதாரரான திரு. சந்தோஷ்குமார் அவர்கள் வீட்டில் இருந்தார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களில் திரு. ஏகநாதசாமிதுரை அவர்களின் பதிவு செய்யப்பட்ட மதிப்பிடாத உயில் சாசனத்தில் எழுதியுள்ள சொத்துக்களை தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் விடுபட்டு போயிருந்தாலும் அவைகளையும் தனது தம்பி குமாரர்கள் திரு. வெற்றிச்செல்வன், திரு. சந்தோஷ்குமார் ஆகிய இருவரும் ஆண்டு அனுபவித்துக்கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளதால் இருவரில் ஒருவர் விண்ணப்பம் அளிக்கும்போது மற்றொருவரான திரு. வெற்றிசெல்வன்

மறுப்பின்மை (நோட்டரி வக்கீல் முன்னிலையில்) கொடுத்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் அரசு வழக்கறிஞர் அளித்த கருத்துரு அடிப்படையில் விண்ணப்பதாரருக்கு பெயர் மாற்றம் நிபந்தனை அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 வீட்டு மின் இணைப்பு எண். 044–017–1065–ஐ திரு. சந்தோஷ்குமார் அவர்கள் பெயருக்கு மாற்றம் கோரி வழங்கிய ஆவணங்களில் திரு. ஏகநாதசாமி துரை அவர்களின் சொத்து ஆவணம் மற்றும் திரு. வெற்றிசெல்வன் அவர்களின் மறுப்பின்மை சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும், அரசு வழக்கறிஞரின் கருத்துருவின்படி வீட்டு மின் இணைப்பு 044–017–1065 பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால், வாரிசு சான்றிதழ் எதுவும் பெறப்படவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 வீட்டு வரி ரசீது 2021–22, VAO சான்று மற்றும் பெயர் மாற்றத்துக்குண்டான பிணையுருதி பத்திரம் ஆகியவை அளித்துள்ளதையும், மேலும், நீதிமன்றத்தில் தடை உத்தரவு எதுவும் இல்லாத நிலையில் பெயர் மாற்றம் செய்யலாம் என்பதையும் கருத்தில் கொண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 மேலும், வழக்கு ஏதேனும் நிலுவையில் இருந்தாலும், நீதிமன்றத்தின் தடை உத்தரவு இல்லாதபோது பெயர் மாற்றம் செய்யலாமெனவும், அரசு வழக்கறிஞர் அவர்களின் கருத்துருவின்படி எதிர்காலத்தில் விண்ணப்பதாரருக்கு எதிராக தீர்ப்பு வரும் பட்சத்தில் நிபந்தனை அடிப்படையில் பெயர்மாற்றம் செய்யப்பட்டதை மாற்றம் செய்திட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் மூலம் தெரியவருவது மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது தன்னுடைய மின் இணைப்பு பற்றியது அல்ல. திரு சந்தோஷ்குமார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை கடலூர் மின் பகிர்மான வட்டம் சரியென ஏற்று அளித்த தீர்ப்பை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு சம்பந்தமாக முறையீடு செய்யாமல் சந்தோஷ்குமார் என்ற நபருக்கு செய்யப்பட்ட மின் இணைப்பு பெயர் மாற்றத்தை ரத்து செய்யுமாறு முறையீடு செய்துள்ளதால் முதற்கண் இந்த மேல்முறையீட்டாளர், ''முறையீட்டாளர்'' என்ற வரையறைக்குள் வருகின்றாரா என்பதை ஆராய வேண்டும். எனவே, நான் மன்ற விதியில் முறையீட்டாளர், நுகர்வோர், முறையீடு ஆகியவற்றிற்கு கொடுக்கப்பட்ட பொருள் விளக்கத்தை ஆராய விரும்புகிறேன். அந்த பொருள் விளக்கங்கள் 2(உ), 2(ஊ) & 2(எ)ல் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் விதியில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*2(உ) "முறையீட்டாளர்'' என்பது:–*

*(i) புதிய இணைப்புக்கான மனுதாரர்களை உள்ளடக்கிய பகிர்வு உரிமம் பெற்றவரால் மின்சாரம் வழங்கப்பட்ட நுகர்வோர்;*
*(ii) நிறுமச்சட்டம், 1956 (1956 ல் 1) அல்லது தற்போது நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தன்னார்வ கூட்டமைப்பு ;*
*(iii) முறையீடு செய்த மைய அரசு அல்லது மாநில அரசு;*
*(iv) ஒரே அக்கரை கொண்ட அதிகப்படியான நுகர்வோர் இருக்கும்போது, ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரோ ;*
*(v) நுகர்வோர் இறந்திருந்தால், அவரது சட்டப்படியான வாரிசுதாரர்கள் அல்லது சார்பாளர்கள்;*

*2(ஊ) "முறையீடு" (Complaint) என்பது கீழே சொல்லப்பட்டுள்ள குறை பற்றி ஒரு முறையீட்டாளர் எழுத்து மூலமாய் கொடுக்கப்படுவது.*

*(i) உரிமம் பெற்றவரால் அளிக்கப்பட்ட மின்சார வினியோகத்தில் உள்ள குறைபாடு அல்லது குறைவு;*
*(ii) மின் இணைப்பு வழங்குவதில் உரிமம் பெற்றவர் செய்யும் நியாயமற்ற அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழில் பழக்கம்;*
*(iii) மின்சாரம் பயன்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிக்கு, ஆணையம் நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமாய் கேட்பது;*
*(iv) தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு எதிராக, பொது வாழ்க்கைக்கு பாதுகாப்பற்றதும் இடர் அளிக்கக்கூடியதுமான மின்சாரப்பணி.*

*2(எ) "மின் நுகர்வோர்" என்பவர் உரிமம் பெற்றவரால் அல்லது அரசால் அல்லது இந்தச் சட்டம் அல்லது அந்தச் சமயத்தில் அமலிலுள்ள ஏதாகிலும் பிறச்சட்டம் மூலம் மின்சாரத்தை பொது மக்களுக்கு விநியோகம் செய்ய அமர்த்தப்பட்ட நபரால், சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் விநியோகிக்கப்பட்டவர். மேலும், எந்த நபரின் வீடு, மின் கருவிகளால் மின்சாரம் பெறுவதற்கு உரிமம் பெற்றவர் அல்லது அரசு அல்லது அனுமதிக்கப்பட்ட பிற நபர் ஆகியோரின் மின் அமைப்புகள் அத்தருணத்தில் இணைக்கப்பட்டுள்ளதோ, அவரும் "மின் நுகர்வோர்".*

**7.4** மேற்கண்ட மூன்று பொருள் விளக்கங்களையும் சேர்த்துப் படிக்கும்பொழுது நாம் அறிவது ஒருவரின் சொந்த உபயோகத்திற்கு பெற்றுள்ள மின்சாரம் மற்றும் அது சம்பந்தமான **2(ஊ)**ல் விவரிக்கப்பட்டுள்ள குறைகளை மட்டும்தான் மன்றமும் மின்குறைதீர்ப்பாளரும் தீர்வு செய்ய முடியும் என்று தெரிகிறது.

**7.5** இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது **திரு சந்தோஷ்குமார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை கடலூர் மின் பகிர்மான வட்ட மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் சரியென ஏற்று அளித்த தீர்ப்பை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.** அதாவது அவரின் சொந்த உபயோகத்திற்கு பெற்றுள்ள மின்சாரம் மற்றும் அது சம்பந்தமான **2(ஊ)**ல் விவரிக்கப்பட்டுள்ள குறைகள் அல்ல என்பதாகும்.

**7.6** மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது மின்குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைத்தீர்ப்பாளர் விதிகளின்படி தீர்விற்கு எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் மேற்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யலாம் என தீர்வு செய்கிறேன்.

**7.7** மின்குறைதீர்மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் என்பவர் ஒரு மின்நுகர்வோரின் மின்னிணைப்புகள் சம்பந்தமான குறைகளுக்கு மட்டுமே தீர்வு காண இயலும். ஆனால் இவ்வழக்கில் நிவாரணம் கோரும் குறைபாடானது இரு நபர்களுக்கிடையேயான சொத்து சம்பந்தப்பட்டதாகும். இது போன்ற தாவாக்களை முடிவு செய்யும் அதிகாரம் உரிமையியல் நீதிமன்றத்திற்குத்தான் உள்ளது, நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு அல்ல. எனவே, மின்நுகர்வோர்கள் இவ்வழக்கில் உள்ளது போன்ற கோரிக்கைகளை நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

8.0 **பகுப்பாய்வு:**

8.1 மின் இணைப்பு எண் 044-017-1065 உள்ள சொத்தின் உரிமையாளர் ஏகநாதசுவாமிதுரை அவர்களின் வாரிசுகள், மேல்முறையீட்டாளர் மற்றும் உடன்பிறந்த சகோதரர்கள் நான்கு பேர்கள் மட்டுமே என்பதற்குரிய ஆதார ஆவணம் சமர்ப்பித்து மேற்படி பெயர் மாற்றத்திற்குரிய ஆவணங்களை எதிர்மனுதாரர்களிடம் சமர்ப்பித்து மின் இணைப்பை தங்கள் பெயருக்கு விதிமுறைகளுக்குட்பட்டு மாற்றிக்கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது.

8.2 ஆள்மாறாட்டம் செய்து மற்றும் போலி ஆவணங்கள் தயார் செய்து வீட்டின் மின் இணைப்பு எண் 044-017-1065-ஐ பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் புகாரை விசாரணை செய்து ஆணை வழங்கும் அதிகாரம் மின்குறைதீர்ப்பாளருக்கு இல்லை. மேற்படி புகார் சம்பந்தமாக காவல்துறை மற்றும் நீதித்துறையை அனுகி நிவாரணம் பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

8.3 உறவினர்கள் தங்களுக்கிடையே உள்ள சொத்துப் பிரச்சனைக்காக உரிமம்தாரரிடமிருந்து பெற்றுள்ள மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்வதால், அந்த சொத்து மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்து கொண்ட நபருக்கு சொந்தமாகிவிடும் என்று நினைத்து செயல்படுவது தவறு.

**9.0 முடிவுரை:**

**9.1** மேற்கண்ட பத்தி 7ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது மின்குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைத்தீர்ப்பாளர் விதிகளின்படி தீர்விற்கு எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் மேல்முறையீட்டாளரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**9.2** மேற்கண்ட தீர்வுடன், இந்த மேல்முறையீட்டு மனு எண் 02/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. பி. வேலுசாமிதுரை,
த/பெ. பெரியசாமிதுரை,
கிழக்கு தெரு, கீழுர் அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி – 607 302.

2) செயற்பொறியாளர்/ இ&ப/குறிஞ்சிப்பாடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணா நகர், CDL மெயின் ரோடு,
குறிஞ்சிப்பாடி – 607 302.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&ப/வடலூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV வடக்குத்து துணை மின் வளாகம்,
State Form Corporation கண்ணத்தோப்பு,
வடக்குத்து – 607 303.

4) மேற்பார்வை பொறியாளர், – By email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7) உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.